# இயேசுவே வாரும்

சகோ.காலேப் யோசுவா,
Tele. 04630 456157

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22 : 20.

" ஓரேப் "
திருவைகுண்டம் - 628 601.
தூத்துக்குடி மாவட்டம்.



## நான் குற்றம் கண்டு பிடிப்போனா?
### அல்லது
## சபையை பக்திவிருத்தி அடையச் செய்வோனா?

1. நம்முடைய தேவனும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய நீதியால் என்னைப்
போல் அருமையான விசுவாசத்தைப் பெற்றவர்களுக்கு:
பிரியமானவர்களே, சத்தியத்தை அறிகிற அறிவினால் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும்
பெருகக்கடவது. உங்கள் ஆத்துமா வாழ்கிறது போல நீங்கள் எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி
வேண்டுகிறேன்.

2. அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமா
யிருக்கிற நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்
களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத் தக்க, பூரண புருஷராகும் வரைக்கும் (2பேது.
1:5-8) பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமா
கிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும் கர்த்தர் என்னை உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்து
வுக்குள் தெரிந்துகொண்டு (எபே.1:4) சுவிசேஷகனாக ஏற்படுத்தினார். எபே.4:11-13.

3. நான் 1978ம் ஆண்டு முதல், 2பேது.1:10ன் படி என்னுடைய ஊழிய அழைப்பையும், தெரிந்து
கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையுள்ளவனாயிருந்து என்னுடைய ஊழியத்தின் பாதையில்
நடக்கும் ஒவ்வொரு சம்பவங்களையும், ஒவ்வொரு அசைவுகளையும் தேவனுடைய வார்த்தையோடும், இக்
காலத்துக்குரிய செய்தியோடும் ஒப்பிட்டு, சோதித்துப் பார்த்துக்கொண்டே வருகிறேன். நான் ஊழியம் கொள்ள
அல்ல ஊழியம் செய்ய வந்ததினால் இதுவரை கடந்த 22ஆண்டுகளாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்
நாமத்தைக்கூறி எனக்கு ஆஸ்திகளையும், சொத்து சுகங்களையும் பெருக்கிக் கொள்ளாமல் கிறிஸ்துவுக்குள்
ஒரு எளிய வாழ்க்கையிலே என்னை நிலைநிறுத்தி வருகிறேன். ஊழியத்தின் பாதையில் எனக்கு ஒருவர் நண்ப
னாக இருந்தாலும் சத்துருவாக இருந்தாலும் எல்லாம் ஒன்றுதான்.

4. நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் காலம், சபை காலங்களிலே மிகக்கொடிதான வஞ்சிப்பின்
காலம். தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் தவிர மற்ற அனைவரும் வஞ்சிக்கப்படுவார்கள். அந்த
அளவுக்கு உண்மை மற்றும் மாறுபாடான உபதேசங்கள் ஒன்றுக்கொன்று மிக்க நெருக்கமாக இருக்கும். இது
தெரிந்துகொள்ளப்படாதவர்களை வஞ்சிக்கும். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்கு
எதிராகக் காணப்படும் பலவிதமான அந்நிய போதனைகள் எபி.13:9, வஞ்சிக்கிற ஆவி, பிசாசினுடைய
உபதேசங்கள் 1தீமோ.4:1, பிலேயாமின் போதகங்கள் வெளி.2:14, நிக்கொலாய் மதஸ்தரின் போதகங்கள்
வெளி.2:15, மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதனைகள் எபே.4:14 தெரிந்து
கொள்ளப்பட்டவர்களை வஞ்சித்து விடாதபடி, அவைகளை அவ்வப்போது கண்டனம்பண்ணி, கடிந்து கொண்டு,
விசுவாசிகளுக்குப் புத்தி சொல்லி, எச்சரிக்கைக் கொடுத்து கர்த்தர் எனக்குக் கொடுத்த ஊழியத்தை நிறை
வேற்றி வருகிறேன். மேலும் சிலர் தங்களை அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்று அழைத்துக்கொண்டா லும்,
அவர்கள் அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் அல்ல (வெளி.2:2) என்று வேதவாக்கியங்களினால் திருஷ்டாந்தப்
படுத்தி, கள்ள கபடமுள்ள வேலையாட்களை அடையாளம் காட்டி, அவர்கள் மந்தையை பீறி விடாதபடிக்கு
எக்காளம் ஊதி எச்சரிக்கைக் கொடுத்தும் வருகிறேன். மேலும் மந்தையிலுள்ள ஆடுகள் வலது இடதுபுறம்
சாய்ந்து விடாதபடி அதற்கு வழி இதுவே, இதிலே நடவுங்கள் எனக்கூறி, செம்மையான வழியைக்காட்டியும்;
ஏற்றவேளைகளில் ஏற்ற ஆவிக்குரிய ஆகாரத்தை தேவனுடைய வார்த்தையிலிருந்தும், இக்காலத்துக்குரிய
செய்தியிலிருந்தும் கொடுத்து சபையை பக்திவிருத்தி அடையச்செய்து வருகிறேன். கிறிஸ்து எனக்கு தேவ
பெலனும் தேவஞானமுமாயிருக்கிறார்.

5. கடந்த ஏப்ரல் மாதம் கடைசி இரு வாரங்கள் நான் சென்னையில் எதிர்பாராத விதமாக தங்க
வேண்டிய நிலை வந்தது. அந்நாட்களை பிரயோஜனப்படுத்தி அநேக ஊழியர்களையும், விசுவாசிகளையும்
சந்தித்தேன். அவர்கள் என்னை உபசரித்தார்கள், எனக்கு பொருளாதார உதவிகளும் செய்தார்கள். அநேகர்
என்னோடு மனம்விட்டு ஆவிக்குரிய காரியங்களை பல மணி நேரங்கள் சம்பாஷித்தனர். நான் பற்பல தலைப்பு

களில் அவ்வப்போது எழுதும் போதனைகளை, உபதேசங்களை பொதுவாக அனைவரும் வரவேற்றார்கள். சிலர் மட்டும், சில ஊழியக்காரர்களுடைய ஊழியங்களிலுள்ள குறைகளை சுட்டிக்காட்டி எழுதுகிறீர்கள், இதை தவிர்த்தால் நலம், அவர்களை அப்படியே விட்டுவிடுங்கள், அவர்கள் கர்த்தருக்கு கணக்கு ஒப்புவித்துப் போகட்டும் என ஆலோசனைகள் கொடுத்தார்கள். அவர்களில் ஒருவர் குறை கூறுகிறவன் வாழவே மாட்டான் என சபிக்கவும் செய்தார். இதன் பிரதிபலிப்பாகத்தான் இந்த இதழ் உருவெடுத்தது.

6. என் ஊழியத்தை நான் நன்கு அறிவேன். என்னுடைய ஊழியத்தின் பாதையில் சகோதரர்கள் எனப்படுபவர்கள் எனக்கு அவ்வப்போது கொடுக்கும் ஆலோசனைகள், என் அழைப்புக்குத் தகுந்தவாறு, கர்த்தர் எனக்குக்கொடுத்த உக்கிராணத்துவத்துக்கு தக்கவாறு இருக்கிறதா என்று ஆவியினால் நிதானித்துப்பார்த்து, அவைகள் என் அழைப்புக்கு ஏற்றவாறு, இசைவாக இருந்தால் மட்டுமே நான் ஏற்றுக்கொள்ளுகிறேன், மற்றபடி அவைகளை நிராகரித்துவிடுகிறேன். ஏனென்றால் கர்த்தருடைய வார்த்தையைக்கொண்டு யெரொபெயாமிடம் தேவனுடைய மனுஷன் வந்தான். தன் பணியை முற்றிலுமாக முடித்துத் திரும்பினான். சக ஊழியக்காரனாகிய கிழவனான ஒரு தீர்க்கதரிசியின் பேச்சைக்கேட்டு, கர்த்தர் அவனுக்குக் கற்பித்த கட்டளைகளை கைக்கொள்ளாமற்போனான். கர்த்தருடைய வாக்கை மீறினான். அந்த கிழவனான தீர்க்கதரிசி சக ஊழியக்காரனான இந்த தேவனுடைய மனுஷனை அவனுடைய ஊழியத்தின் பாதையிலிருந்து கடைசி வேளையில் திசைதிருப் பினான். இதன் விளைவாக, அந்த தேவனுடைய மனுஷனை ஒரு சிங்கம் வழியிலே கொன்றுபோட்டது. இதை நீங்கள் 1இரா.13வது அதி. யில் தியானிக்கலாம். இது தேவனுடைய உண்மையான ஒவ்வொரு ஊழியக்காரனுக் கும் திருஷ்டாந்தமாக எழுதிவைக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் நான் எப்பொழுதுமே இந்த சம்பவத்தைக் கொண்டு, சகோதரர்கள் கொடுக்கும் ஆலோசனைகளை பலமுறை ஆவியில் நிதானித்துப்பார்த்து ஏற்றுக் கொள்வேன் அல்லது நிராகரிப்பேன். ஆதலால்தான் நான் இதுவரை என் ஊழியத்தின் பாதையில் இடறி விழவில்லை, விசுவாசிகளை ஏமாற்றிப் பிழைக்கவில்லை, பந்தயப் பொருளை இழந்து போகவில்லை.

7. நான் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காக, அதன் மத்தியில் காணப்படும் குறைகளைக்கூறி, தவறுகளை எடுத்துக்காட்டி அவைகளை சரி செய்துகொள்ள கண்டித்து உணர்த்தும்போது, செம்மையான வழியைவிட்டு தப்பி நடந்து, பேயோரின் குமாரனாகிய பிலேயாமின் வழியைப் பின்பற்றிப் போனவர்கள், தங்கள் சாதுரியப் பேச்சினாலும், நயவசனிப்பினாலும் இதோ இவன் நம்மைக் குறை கூறுகிறான்; நம்மீது குற்றம் சுமத்துகிறான்; பாருங்கள், எப்பொழுதும் நம்மை ஓயாமல் திட்டிக்கொண்டே இருக்கிறான்; இவன் நம்முடைய தீர்க்கதரிசி மற்றும் அவரது குடும்பத்தினரைக்கூட விட்டு விடமாட்டான்போல் தெரிகிறது எனக் கூறிக்கூறியே மந்தையின் மனதில் ஒரு தவறானக் கருத்தை சுவற்றில் ஆணியை திரும்பத்திரும்ப வேகமாக அடிப்பது போன்று எனக்கு விரோதமான எண்ணங்களை பதியவைத்து அவைகள் சரி எனக்கூறி திசைதிருப்ப முயற்சிக்கிறார்கள். சிலர் இவர்கள் வலையில் விழுந்துவிட்டதையும் அறிவேன். ஆனாலும் அவர்கள் மனத்தெளிவு அடைவார்கள் என்ற நம்பிக்கையும் உண்டு.

8. இங்கு நீங்கள் **குறை கூறுகிறான், குற்றம் சுமத்துகிறான்** என்று என்மீது சுமத்தும் குற்றச சாட்டுகள் தவறா அல்லது சரியானதா என நீங்கள் லவோதிக்கேயா சபை தூதன் என்றும், இருபதாம் நூற்றாண்டு தீர்க்கதரிசி என்றும் விசுவாசிக்கும் சகோ.வில்லியம் மாரியன் பிரன்ஹாம் செய்தியிலிருந்து நிதானித்துக் கொள்ளுங்கள். நீங்கள் விசுவாசிக்கும் இந்தச் செய்தியே என்னைக் குறித்து உங்களைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்.

9. **Now, I am known to be a critic, but I'd .... I.... I am not critical, only anything that is wrong. See ! But I .... We should criticize wrong. இங்கு உங்கள் தீர்க்கதரிசி தன்னைக் குறித்து, நான் குற்றம் கண்டுபிடிப்போன் என அறியப்படுவதாகவும், ஆனால் அது அப்படி அல்ல. தவறுகளைக் குறித்தே அவர் குற்றப் படுத்துவதாகவும், அவர் மட்டுமல்ல, நாம் அனைவரும் தவறுகளைக் குறித்து குற்றப்படுத்த வேண்டும் எனக் கூறுகிறார்**. இதை நீங்கள் The way of a True prophet என்ற செய்தியில் 11ம் பக்கம், பத்தி 2ல் வாசிக்கலாம். செய்தி நாள் 13-05-62 இந்தச்செய்தி தமிழில் **ஒரு உண்மையான தீர்க்கதரிசியின் பாதை** என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால் ஆங்கிலச் செய்தியிலுள்ள முதல் பத்து பக்கங்கள் தமிழ் மொழி பெயர்ப்பில் இடம் பெறவில்லை. தமிழ் மொழிபெயர்ப்புகளை நம்பி மோசம் போனோர் அநேகர். இந்தப் பழியை சகோ.எட்பிஸ்கல் சுமந்துதான் ஆகவேண்டும்.

10. **ஆதலால் பிரியமானவர்களே, பிழைகளை எடுத்துக்கூறி, தவறுகளைச் சுட்டிக்காட்டி, எதிர்ப்பவர்களைக் கடிந்து கொண்டால்தான் சபை தன்னை சீர் தூக்கிப்பார்த்து, தவறை உணர்ந்து தன்னைத் திருத்திக் கொண்டு பக்திவிருத்தி அடையமுடியும். ஒருவன், மற்றொருவனுக்குத் தெரிவிக்காவிட்டால், அது அவனுக்கு எப்படித்தெரியும்? ஆக தவறுகளைச் சுட்டிக்காட்டி, அதை நீங்கள் திருத்திக்கொள்ள ஒருவன் உங்களை அழைக்கும்போது, அவனை குற்றம் கண்டுபிடிப்போன் என நீங்கள் கூறுவீர்களானால் உங்களில் வாசம் செய்வது அந்நிய ஆவியாகும்.**

11. **Because of God you cry out against evil, cry out against sin, cry against the things that's wrong (Running from the presence of the Lord. Page 25, para 122 Dt. 17-02-1965) இங்கு தேவன்**

**நிமித்தமாக நீங்கள் தீமைக்கு எதிராக கூச்சலிடுங்கள், பாவத்திற்கு எதிராக கூச்சலிடுங்கள். தவறான காரியங் களுக்கு எதிராக கூச்சலிடுங்கள் என தீர்க்கதரிசி கூறுகிறார். பாருங்கள் தவறான காரியங்களுக்கு எதிராக கூச்சலிடுகிற வர்கள்தான் கிறிஸ்துவின் உண்மையான உக்கிராணக்காரர்கள்.** இங்கு எனக்கு ஒரு சம்பவம் ஞாபகம் வருகிறது. நான் A.G. சபையில் இருந்த காலத்தில் சிகரெட் புகைக்கும் வழக்கம் இருந்தது. பாஸ்டர் பிரசங்கம் செய்து கொண்டிருப்பார். நான் வெளியே வந்து சிகரெட் புகைத்துக் கொண்டிருப்பேன். இதை அறிந்தும் பாஸ்டர் என்னைக் கண்டிப்பது இல்லை. ஏன்? நான் சபையின் செலவுகளை ஓரளவுத் தாங்கிவந்தேன் பாஸ்டர் என்னைக் கண்டித்தால், ஒருவேளை நான் சபைக்கு வராமல் நின்று, அதனால் சபைக்கு வரும் வரவு நின்றுவிடக்கூடாது என்ற சுயநல நோக்கம் தான். இன்றும் அவ்வண்ணமாகத்தான் சபைகளில் மேய்ப்பர்களின் சுயநல நோக்கங்கள் காணப்படுகின்றன. ஆதலால் அவர்கள் பாவத்தை எதிர்த்து நிற்க முடியவில்லை. **விக்கிரகாராதனையான பொருளாசை**யே இதற்கு காரணம்.

12. **தேவனுடைய உண்மையான ஊழியன் ஒவ்வொருவனும் தேவனுடைய வார்த்தைக்கு உண்மையாயிருக்கவே விரும்புவான். நீங்கள் அவ்வாறே அதற்கு உண்மையாயிருக்க வேண்டும். நீங்கள் உண்மையாயிராவிடில், அதற்கு எதிராக ஒரு சத்தம் எங்கோ கூச்சலிட்டுக்கொண்டே இருக்கும்.** (அவருடைய வருகையின் அடையாளமாக பிரகாசிக்கும் சிகப்பு விளக்கு. பக்கம் 50, பத்தி 147, நாள் 23-06-63) பாருங்கள், ஊழியக்காரர்கள் கூட, தங்கள் ஊழியத்தில் உண்மையாயிராவிட்டால் அதற்கு எதிராக ஒரு சத்தம் எங்கோ கூச்சலிட்டுக்கொண்டே இருக்கும் என தீர்க்கதரிசி கூறுகிறார். நான் என் ஊழியத்தில் தவறினால், கர்த்தர் என் இடத்தில் மற்றொருவனை நியமித்து அந்த சத்தத்தை கூச்சலிடச் செய்வார்.

13. **அப்படியிருக்க, அவர்களுடைய செயல்களை நீங்கள் ஏன் குற்றப்படுத்த வேண்டும். ஏனென்றால் நான் ஒரு சாட்சியாக இருக்கவேண்டும். அவ்வாறே நீங்களும் சாட்சியாக இருக்கவேண்டும். எல்லா விசுவாசிகளும் சாட்சிகளே.** (கடைசி காலத்தில் ஆவியின் அபிஷேகம் பெற்றுள்ளவர்கள். பக்கம் 43, பத்தி 1, நாள் 25-07-65) பாருங்கள் ஒரு காரியத்தைக் குறித்து நியாயத்தீர்ப்பின் நாளில் ஒருவன் தான் அதைக்குறித்து அறியவே இல்லை என சாக்குப்போக்கு கூறமுடியாது. ஆதலால்தான் தேவன் தம்முடைய ஊழியக்காரர்களைக் கொண்டு குறைகளை எடுத்துக்காட்டி, தவறான காரியங்களைக் கண்டித்து அதற்கு சாட்சியாக அவர்களை நிறுத்துகிறார்.

14. **I said, “It is my duty to speak against anything that is wrong!”. God help the preacher that has not got a discernment of the right enough!. Anything that is wrong .... We should preach against it .... And they’re afraid to say it in the congregation, because they know they’re guilty. (Discerning the body of the Lord. Page 8 Dt. 12-08-59) இங்கு கூட தீர்க்கதரிசி தவறுக்கு எதிராக பேசுவது தன்னுடைய கடமை என்கிறார். தவறுக்கு எதிராக பிரசங்கியுங்கள் என்கிறார். தேவனே தவறானதை சரியாகப் பகுத்தறியும்படி ஊழியக்காரனுக்கு உதவும் என்கிறார்.** பொதுவாக ஊழியக்காரர்கள் தவறுகளைக் கண்டித்து உணர்த்தும்போது, சாத்தான் தன்னுடைய காரியங்கள் வெளிப்படுகிறதே எனப்பயந்து அந்த ஊழியக்காரனுக்கு விரோதமாக தன் ஊழியக்காரர்களை ஏவிவிடுகிறான். இதுதான் இன்று நம் மத்தியில் நடந்துகொண்டிருக்கிறது.

15. **Let me stand here Lord, against everything that’s called wrong, everything that looks wrong. I don’t care what anyone says, let me stand Lord. When I’ve done all I can do, help me stand .... When then things come, and the treasures of the world and all of it pomp and its glory ; blind my eyes to it .... If it costs every friend I got, if it costs everything I got ; that doesn’t mean one thing. (Strait is the gate. Page 60, para 177 Dt. 01-03-59) பாருங்கள், இங்கு தீர்க்கதரிசி தவறு என்று அழைக்கப்படுகிறவைகள் எவைகளோ, தவறு என காணப்படுவது அனைத்துக்கும் தான் விரோதமாக நிற்பேன் என்கிறார். யார் என்ன சொன்னாலும் அதுபற்றித் தனக்கு கவலை எதுவுமில்லை என்கிறார். தான் தன்னால் முடிந்த எல்லாவற்றையும் செய்ய வேண்டுமென்கிறார். அப்பொழுது இந்த உலகத்தின் மேன்மைக்கு தேவன் தன் கண்களைக் குருடாக்கும் படிக் கூறுகிறார். தன் நண்பர்களையும், தனக்கு உண்டான எல்லாவற்றையும் அதற்காக இழந்துபோகும் நிலை வந்தாலும்கூட தவறுக்கு எதிராக நிற்பேன் என்கிறார். இதுதான் ஒரு உண்மையான தீர்க்கதரிசியின் பாதை. இதுதான் சபை பக்திவிருத்தி அடைய தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஐந்துவகை ஊழியங்களின் பாதையுமாகும்.**

16. தேவனுடைய வார்த்தை கூட, சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா, நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்து கொண்டு, புத்திசொல்லு, ஏனென்றால் இது ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாது செவித்தின வுள்ளவர்களாய் இருக்கும் காலம் எனக் கூறுகிறது. 2தீமோ.4:2-4. சத்தமிட்டுக் கூப்பிடு; அடக்கிக்கொள்ளாதே, எக்காளத்தைப்போல் உன் சத்தத்தை உயர்த்தி என் ஜனங்களுக்கு அவர்கள் மீறுதலை, பாவங்களை தெரிவி என ஏசா.58:1ல் கர்த்தர் உரைக்கிறார். ஆக பிரியமானவர்களே, குறைகளை உணர்த்துவது, தவறுகளைச் சுட்டிக்காட்டி அவைகளை சகல அதிகாரத்தோடும் கடிந்து கண்டனம்பண்ணி புத்தி சொல்லி, சபையை பக்திவிருத்தி அடையச்செய்வது ஒவ்வொரு ஊழியக்காரனுடைய கடமையாகும்.

17. சபை பக்திவிருத்தி அடைய தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஒவ்வொரு ஊழியக்காரனும் ஒரு காவற்காரனே. பாருங்கள் **காவற்காரன் பட்டயம் வருவதைக்கண்டும், அவன் எக்காளம் ஊதாமலும் ஜனங்கள் எச்சரிக்கப்படாமலும் பட்டயம் வந்து அவர்களில் யாதொருவனை வாரிக்கொள்கிறது உண்டானால், அவன்தன் அக்கிரமத்தினாலே வாரிக்கொள்ளப்பட்டான். ஆனாலும் அவன் இரத்தப்பழியை காவற்காரன் கையிலே கேட்பேன் என்று கர்த்தர் கூறுகிறார்.** எசே.33:6. ஏன்? காவற்காரன் பட்டயம் வருவதைக்கண்டு எக்காளம் ஊதி ஜனங்களை எச்சரிக்கவில்லை. அவ்வாறாகவே ஐந்துவகை ஊழியங்களில் உள்ள ஒவ்வொரு ஊழியக்காரனும் குறைகள், தவறான உபதேசங்கள் சபையில் காணப்படும்போது அவைகளுக்கு எதிராக எக்காளம் ஊதி சபை பக்தி விருத்தி அடைய எச்சரிக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

18. என்னுடைய ஊழியத்தின் ஆரம்ப நாட்களிலிருந்தே அதாவது 1978வது ஆண்டிலிருந்தே திருத்துவ உபதேசம், அதாவது தேவரீர் ஒரே தேவனும், ஒரே கர்த்தருமாயிருக்கிறீர், ஒருவராய் மாத்திரம் இல்லாமல், ஒரே தத்துவமுடைய மூவராயிருக்கிறீர் என்ற உபதேசம் மற்றும் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் ஞானஸ்நானம் தவறு என வேதவசனங்களைச் சுட்டிக்காட்டி; ஒரே தேவன், அவர் நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து; ஒரே ஞானஸ்நானம், அது பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் என வேதவாக்கியங்களைக் கொண்டு திருஷ்டாந்தப்படுத்தி, பல செய்திகள் தேவத்துவம், ஞானஸ்நானம் தலைப்புகளில் எழுதி வெளியிட்டு வந்துள்ளேன்.

19. சகோ.பாலாசீர் லாறி, மனுஷகுமாரன் என்ற உபதேசத்தையும் அவ்வப்போது கடிந்து, கண்டனம்பண்ணி அது ஒரு கொடிய வஞ்சகம் என்பதை விவரித்துக்காட்டி பத்திரிக்கையில் செய்திகள் வெளியிட்டுள்ளேன். இப்படியிருக்க நான் பாலாசீர் லாறிக்கு துணை சென்றேன் என பாஸ்டர் டேனியேல் கிறிஸ்டியான் என்மீது குற்றச்சாட்டை எழுதினார். அதை நிருபித்துவிட்டால் நான் என் ஊழியத்தைவிட்டு விலகுகிறேன் என்று அவருக்கு சவால் விட்டேன். என்மீது குற்றச்சாட்டை எழுதினபின் பாஸ்டர் ஜோசுவா கொட்டி இப்பொழுது உயிருடன் இல்லை, ஆதலால் அது நிருபிக்கக்கூடாத காரியம் என எழுதி மழுப்புகிறார். பாஸ்டர் ஜோசுவா கொட்டி தான் உயிருடன் இல்லை, பாஸ்டர் டேனியேல் கிறிஸ்டியான் உயிருடன் இருக்கிறாரா, இல்லையா?

20. வேலூர் தாமஸ், **கர்த்தராகிய கிறிஸ்து பிரன்ஹாம்** உபதேசத்தைக் கொண்டுவந்தார். இது 1961க்கு முன்னே அமெரிக்காவில் வேர்கொண்டது. தீர்க்கதரிசி இது பிசாசினுடைய பயங்கரமான, வெட்கக்கேடான, தேவபக்தியற்ற ஒரு பொய் எனக் கூறினாலும், இனி ஒரு தடவைகூட எவருக்குள்ளும் இக்காரியம் பேசப்பட்டு, அது என் காதில் வந்து விழவேண்டாம் எனக் கூறினாலும், சகோ.தாமஸ் தன் உபதேசத்தினால் விசுவாச துரோகத்தைக் கொண்டுவந்தார். அதையும் கண்டித்து அநேக கைப்பிரதிகள் ஆங்கிலத்தில் வெளியிட்டேன். மந்தை, தப்பவிடாத கொடிதான ஓநாயின் வாயிலிருந்து தப்புவிக்கப்பட்டது.

21. தீர்க்கதரிசி தான் கண்ட தரிசனத்தின்படி துப்பாக்கியினால் சுடப்பட்ட அந்த சர்ப்பம் (உபதேசம்) சாகாமல் தடுமாறிக்கொண்டே ஒரு சிறுநீர் நிறைந்த குட்டையினுள் போய்விட்டது. நல்லது, அது இனிமேல் அதிகம் சேதத்தை விளைவிக்க முடியாது, மேலும் அது அழிவுக்கேதுவாகக் காயப்பட்டிருக்கிறபடியால், அது செத்து விடும் என்றார் (இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்தல் பாகம் 2, பக்கம் 1213, பத்தி 39-41) இந்த தரிசனத்தின்படி தற்போது இந்த உபதேசம் அதிக சேதத்தை விளைவிக்கவில்லை ஆனாலும் இது கூடிய சீக்கிரத்தில் செத்துவிடும். அந்நிலையில்தான் இந்த உபதேசம் இந்நாட்களில் காணப்படுகிறது. ஆதலால் இந்த உபதேசம் பற்றி இனி கவலையே இல்லை.

22. பின் ஸ்திரீயின் தலை முக்காடு பிரச்சினை வந்தது. ஸ்திரீக்கு அவள் நீளமாய் வளர்க்கிற தலைமயிரே முக்காடாக கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற உபதேசத்தை, நம்முடையவர்கள் என்று நாம் கருதிய சிலர் எதிர்த்தனர். தீர்க்கதரிசி **That's right, for the woman is suppose to have long hair, that's the covering** அதாவது ஸ்திரீகள் நீண்ட தலைமயிரை உடையவர்களாய் இருக்கவேண்டும். அதுவே அவர்களது தலை முக்காடு எனக் கூறினாலும் இவர்கள் தங்கள் இருதய கடினத்தின் நிமித்தமாக இந்த உபதேசத்தை ஏற்றுக்கொள்வதில்லை. ஆதலால் இது குறித்து பல கைப்பிரதிகள் அவ்வப்போது வெளியிட்டேன். எதிர்த்தவர்கள் இன்று மண்பாண்டங்களைப் போல் நொறுக்கப்பட்டுப் போனார்கள். ஆனாலும் தங்கள் பண பலத்தினாலும், மாயையான தாழ்மையினாலும், ஆரவாரத்தினாலும் மிகக் குறைந்தவர்களுடைய மனதையே மயக்கி அதில் நிலைத்திருக்கிறார்கள். ஆனாலும் இவர்கள் பலப்படுவதில்லை என்பது உறுதி.

23. இதன் பின்பு தமிழ் மொழிபெயர்ப்பு தலைவிரித்து ஆடியது. முன்னாள் பாலாசீர் லாறியின் மணவாட்டிகள், மற்றும் கிறிஸ்து பிரன்ஹாம் விசுவாசிகள் ஆங்கிலத்திலிருந்து செய்திகளை தமிழில் மொழிபெயர்ப்பதினால், இந்த இரு சாராருடைய உபதேசங்களுக்கு ஏற்றவாறு தமிழ் மொழிபெயர்ப்பு அமைந்தது. தமிழ் மொழிபெயர்ப்பு எங்கும் எதிலும், கூட்டியும், குறைத்தும் மாறுபாடுகள் கொண்டதாகக் காணப்பட்டது. ஆதலால் இதையும் கண்டித்தேன், எதிராகக் கூச்சலிட்டேன். செய்தியை மொழிபெயர்ப்பவன், தான் மட்டுமல்ல, தன் மனைவி மக்களுடன் செய்தியில் நிலைத்திருந்து, அதன்படி வாழ்ந்து காட்டுகிறவனாக இருக்கவேண்டும். ஒருவன் செய்தியை மொழிபெயர்க்க இரண்டுபேர் அதை சரிபார்க்க, அக ஒரு மொழிபெயர்ப்பில் இந்த மூவருடைய

கையெழுத்துக்கள் இருந்தால்தான் அது பிரிண்டிங்க்கு செல்லவேண்டும் என்றேன். மேலும் இதற்கு தகுதியான நபர்கள் கிடைக்காவிட்டால், அதற்காக கர்த்தருடைய சமூகத்தில் காத்திருந்து, ஜெபித்து, தகுதியான நபர் கிடைத்தபிறகே பணி தொடர வேண்டும் என்றேன். அரைகுறையாக செய்தியில் உள்ளவர் களைக் கொண்டு செய்தியை மொழிபெயர்க்கக் கூடாது என எச்சரித்தேன். ஆனால் இவைகள் யாவும் செவிடன் காதில் சங்கு ஊதினதாகவே இதுவரை இருந்து வருகிறது.

24. மேலும் WBGNSல் அரசியல் நடப்பதையும் எதிர்த்து அவர்களைக் கண்டித்தேன். இவர்கள் விசுவாசிகள் மத்தியில் பிரிவினைகளை உண்டுபண்ணி, சில ஊழியர்களை தங்களுக்கு சாதகமாகக் கொண்டு பாகுபாடுடன் நடந்து வருகிறார்கள். மேலும் இங்கு உலகப்பிரகாரமான தில்லுமுல்லுகளும் நிறைய உண்டு. இதையெல்லாம் கண்டித்தும் இதுவரை இவர்கள் தங்கள் அக்கிரமத்தை விட்டு மனம்திரும்பவில்லை. ஆதலால் WBGNSயே உனக்கு ஐயோ என எச்சரித்துள்ளேன்.

25. பின் சகோ.டேனியேல் கிறிஸ்டியான் இயற்கையாக உற்பத்தி செய்யும் அந்நிய அக்கினி ஸ்தம்பம் உருவெடுத்தது. மக்கள் வஞ்சிக்கப்பட்டனர். இவர் இந்த தொழிலில் பிரபலமானார், குபேரனானார். இந்த ஊழியத்தையும் கண்டித்து எழுதி, அது இந்நாட்களில் ஒரு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இவர் தனது ஊழியத்தில் தோன்றினதாக பிரசுரித்து, விற்பனை செய்த புகைப்படங்களின் நெகட்டிவ்களை ஆவிக்குரிய, விஞ்ஞான, இரசாயன பரிசோதனைகள் செய்து, அவைகள் உண்மையாகவே தேவனுடைய பிரசன்னம் என்று நிருபித்தால் வெளி.12:10ன் படி நான் என் ஊழியத்தை விட்டு விலகுகிறேன் என்று ஒரு சவால் கொடுத்தேன். அதை நிருபிக்க முன் வரவில்லை. இது எவ்வளவு ஒரு பெரிய வஞ்சிப்பு என்பதை ஆவிக்குரியவர்கள்தான் உணரமுடியும். இவரது ஊழியம் தேவபக்தியை ஆதாயமாகக் கொண்ட ஒரு தொழில், ஒரு போலி ஊழியம் மற்றும் 2தெச.2:1,11,12ன் படி எடுத்துக்கொள்ளப்படுதல் நடைபெற இருக்கும் நாட்களில் நிகழ இருக்கும் கொடிதான வஞ்சிப்பைக்கொண்ட ஊழியம் என்பதை இவரால் உற்பத்தி செய்யப்பட்ட அந்நிய அக்கினி ஸ்தம்பம் நிருபித்துவிட்டது.

26. ஆனாலும் அவர் ஒன்றைவிட்டு மற்றொன்றை பிடித்துக்கொண்டார். எப்படியாவது ஆடம்பரமாக வாழ்வதற்கு வருமானம் வேண்டும் அதற்கு தொழிலும்வேண்டும். இவருடைய சுய வருமானத்தை வைத்து ஆடம்பர வாழ்க்கை வாழமுடியாது. வாழ்ந்த ஆடம்பர வாழ்க்கைகளையும் இனி விட்டுக்கொடுக்க முடியாது. ஆதலால் புதிய தொழிலாக தொலைக்காட்சி நிகழ்ச்சியை ஆரம்பித்தார். டெலிவிஷன் (Television) என்ற தொலைக்காட்சி, ஹெலிவிஷனாக (Hellevision) நரகக்காட்சியாக இருப்பதால், அது வீட்டில் இருந்தால் அதைத் தூக்கி எறியுங்கள் என செய்தி கூற, அதை வாங்கி உங்கள் வீடுகளில் வைத்து நான் கொடுக்கும் செய்திகளை கேளுங்கள் என்கிறார். இதுவும் செய்தியின் அடிப்படையில் தவறு என சுற்றறிக்கை வெளியிட்டு, மக்கள் மனதில் ஒரு விழிப்புணர்ச்சியை கொண்டுவந்துள்ளேன். ஆக இது இப்பொழுது இவருக்கு ஒரு தொல்லைக்காட்சியாகவே இருந்து வருகிறது. தன்னுடைய தொலைக்காட்சிக்கு பணம் கேட்க, சகோ.தேவதாஸ் அந்த தொல்லைக்காட்சிக்கு பணம் கொடுக்க முன்வரவில்லை. மாறாக எனக்கு ரூ.15,000/- கொடுக்கப்போகிறேன் என்றவுடனே வயிற்றில் தாங்கமுடியாத எரிச்சல். கொடுத்துவிட்டேன் எனக் கூறியிருந்தால் அதினால் உண்டாகும் அதிர்ச்சி மாரடைப்பையே கொண்டு வந்திருக்கும் என நினைக்கிறேன்.

27. இவ்வாறாக தனது தொழிலுக்கு என்னால் பாதகம் ஏற்படுவதால் என்மீது சீற்றம் கொண்டு எரிச்சலின் ஆவியினால் தூண்டப்பட்டு என்ன எழுதுகிறோம் என்றுகூட சிந்திக்காமல் எதை எதையோ தன் மனம்போன போக்கில் எழுதி தான் கற்பனை செய்த, போலியாக தயார்செய்த அநேக குற்றச்சாட்டுகளைக் கொண்டு என்னை தூஷனமாய் குற்றப்படுத்தி வருகிறார். ஆனால் குற்றச்சாட்டுகளை நிருபிக்க முன் வருவது இல்லை. இப்படியிருக்க தெளிவாக, ஆதாரங்கள் இல்லாது இவர் கூறும் புதுப்புது குற்றச்சாட்டுகளுக்கு நான் பதில் கொடுத்துக்கொண்டே கர்த்தருடைய பணத்தை வீணாக்கவிரும்பவில்லை. ஏனென்றால் நான் செலவு செய்யும் ஒவ்வொரு காசும் கர்த்தருக்குரியது.

28. இப்பொழுதும் இவர் என்மீது பல குற்றச்சாட்டுகளை கூறியுள்ளார். அவைகளை இவர் எழுதிய படி உண்மையான சம்பவங்கள் என நிருபித்துக்காட்டட்டும். நான் என் ஊழியத்தை விட்டு விடுகிறேன். முன்பு என்மீது கூறிய குற்றச்சாட்டுகளை நிருபிக்க முடியாமல், அவைகளை இயேசு கிறிஸ்துவிடம் ஒப்படைக்கிறேன் என்றுகூறி மழுப்பிவிட்டார். முன்பும், இப்பொழுதும் கூறிய குற்றச்சாட்டுகளை அவர் நிருபிக்கா விட்டால் வெளி. 12:10 அவருக்கே பொருந்தும். ஆனாலும் மூடனுக்கு அவன் மதியீனத்தின்படி மறு உத்தரவு கொடு; கொடா விட்டால் அவன் தன் பார்வைக்கு ஞானியாயிருப்பான் என்ற நீதிமொழியின்படியும், ஆவியானவர் வழிநடத்துதலின்படியும் இங்கு சில அத்தியாவசியமான காரியங்களுக்கு மட்டும் விளக்கம் எழுதவேண்டியதாயிற்று.

29. தசமபாகம் கர்த்தருக்குரியது. ஆனால் தசமபாகத்தில் மனுஷன் தேவனை வஞ்சிக்கிறான். அவனை கர்த்தர் சபிக்கிறார். மல்.3:8,9. தசமபாகம் கொடுப்பதைக் குறித்து கண்டித்தால் இவன் பணபிரியன், தசமபாகத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறான் என்கிறார்கள். ஆனால் கர்த்தருக்குரிய தசமபாகத்தை திருடுகிறவன் சபிக்கப்பட்டவன் என்று தேவனுடைய வார்த்தை கூறுவதை அலட்சியம் பண்ணுகிறார்கள். காரணம்

விக்கிரகாராதனையான பொருளாசைதான். இவ்வாறாக ஆரோக்கியமான உபதேசங்களை போதிப்பதினால் அநேகருடைய வெறுப்புக்குள்ளாக வேண்டியதிருக்கிறது. ஆனால் இதை நான் அவர்கள் பக்திவிருத்திக்காகவே போதிக்கிறேன் என்பதை மறந்துவிடுகிறார்கள்.

30. தசமபாகம் கர்த்தருக்குரியது. கர்த்தர் அதை லேவிக்குக் கொடுத்தார். லேவிக்கு தன சகோதரர் மத்தியில் பங்கும், சுதந்தரமுமில்லை. கர்த்தரே அவனுக்கு சுதந்தரம். இன்று ஐந்துவகை ஊழியக் காரர்கள்தான் லேவியர்கள். தசமபாகம் ஐந்துவகை ஊழியர்களுக்கும் உரியது என்று பிரசங்கித்தேன், செய்தி வெளியிட்டேன். கர்த்தருக்குரிய தசமபாகத்தை மேய்ப்பன் மட்டும் விழுங்குவதைக் கண்டித்தேன். என்ன தசமபாகம் ஐந்துவகை ஊழியர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கப்படவேண்டுமா? இவர் எனது பிழைப்பில் கை வைக்கிறாரே என்று நினைத்தாரோ என்னவோ பாஸ்டர் தங்கமணி சாமுவேல் என்னை அவர் சபையில் மறுமுறை அனுமதிக்கவே மறுத்துவிட்டார். பாருங்கள் மேய்ப்பர்கள் சத்தியத்துக்கு செவிசாய்க்க, சத்தியத்தின் படி நடக்க மறுக்கிறார்கள். தங்கள் சுய மனம்போன போக்கிலே சபையை வழிநடத்த விரும்புகிறார்கள்.

31. ஐந்துவகை ஊழியத்தில் உள்ளவர்களுக்கு பிரத்தியேகமாக அவரவர்களுக்கென்று ஒரு சபை கூடுதல் இருக்கவேண்டும், அதாவது அவர்கள் ஏதாவது ஒரு லோக்கல் சபையில் அங்கத்தினராக இருக்க வேண்டும் என்கிறார்கள். இது ஒரு தவறான உபதேசம். ஐந்துவகை ஊழியங்கள் அனைத்து லோக்கல் சபை களுக்கும் பொதுவானது, ஊழியர்கள் அனைத்து சபைகளுக்கும் பொதுவானவர்கள். அவர்கள் நிலையாக ஒரு இடத்தில் இருப்பது இல்லை. அவர்கள் பற்பல இடங்களுக்கு சென்று ஆங்காங்கு சபை கூடுதல்களில் பங்கு கொண்டு தங்கள் ஊழியத்தின் செய்தியை சபை பக்திவிருத்திக்காக கொடுத்து வருவார்கள். ஒவ்வொரு லோக்கல் சபையும் அவர்களுக்கு இடம் கொடுத்து, ஐந்துவகை ஊழியத்தின் பலன்களைப் பெற்று, சபை பக்திவிருத்தி அடையச்செய்ய வேண்டும். மந்தைக்கு பாஸ்டர் ஊழியம் மட்டும் போதாது. ஆனால் மேய்ப்பர்கள் இதர ஊழியங்களைக் கண்டுகொள்வதில்லை. அப்படியானால் அந்த சபை ஒருக்காலும் பக்திவிருத்தி அடையாது. அது ஒரு தனிப்பட்ட மனிதனின் கூண்டுக்குள்ளே வாழ்ந்து கொண்டிருக்கும். கர்த்தர் தம்முடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தி அடைய மேய்ப்பன் ஊழியத்தை மட்டுமல்ல, இதர நான்கு ஊழியங்களையும் ஏற்படுத்தியுள்ளார். ஐந்துவகை ஊழியத்தின் ஆத்தும நன்மைகளை பெறும் லோக்கல் சபைகள், அந்தந்த ஊழியக்காரனுக்கு தசமபாகத்தின் பலனைக் கொடுக்கவேண்டும். முழு தசமபாகத்தையும் தாங்களே அனுபவித்து வந்த மேய்ப்பர்களுக்கு இது வேதனையாகவே இருக்கிறது. **தசமபாகம் மற்றும் காணிக்கை** என்ற தலைப்பில் ஒரு செய்தி தெளிவாக எழுதியுள்ளேன். கிறிஸ்துவின் சரீரமாகிய சபை உலகம் முழுவதும் பரவிய ஒரு காணக்கூடாத சரீரம் என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. இந்த சபை பக்திவிருத்திக்கு கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட ஒரு ஊழியக்காரனை நீங்கள் ஒரு லோக்கல் சபைக்குள் கட்டுப்படுத்த முடியாது. ஏனென்றால் அவனது ஊழியம் ஒரு லோக்கல் சபைக்கு மட்டுமல்ல, அது முழு கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு உரியது.

32. ஐந்துவகை ஊழியத்தில் ஒருவனுக்கு ஒரு ஊழியம்தான் என எழுதினேன். மும்பை வாழ் **எல்லாம் தெரிந்தவர்** 1தீமோ.2:7ஐ குறிப்பிட்டு பவுல் மூன்றுவகை ஊழியங்களை ஒரே நேரத்தில் செய்தான். அவன் பிரசங்கி (Preacher) , அப்போஸ்தலன் (Apostle), மற்றும் போதகன் (Teacher) ஆக இருந்தான், ஆதலால் யோசுவா தன் அறியாமையினால் எழுதிவிட்டார், வேதம் பொய்யா அல்லது யோசுவா பொய்யா நீங்களே நிதானித்துக்கொள்ளுங்கள், யோசுவா எழுதியது இக்காலத்துக்குரிய செய்தியல்ல, மாறாக அது இக்காலத்துக்குரிய குழப்பம் என விமர்சிக்கிறார்.

33. பாருங்கள், பிரியமானவர்களே நீங்கள் இக்காலத்துக்குரிய செய்தி என்று விசுவாசிக்கும் அந்தச் செய்தி என்ன கூறுகிறது? **Now, in this, He… you can't mix two or three different ministries together, Paster and Evangelize the same time. You can't be a – a Prophet and may be a Paster at the same time, see, because you have different works, different ministry. (Spiritual food in due season. Page 20, Para 142 Dt.18-7-65.)** ***வழக்கம்போல இந்தப் பகுதியை தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் சரியாக மொழி பெயர்க்கவில்லை***. இங்கு தீர்க்கதரிசி என்ன கூறுகிறார்? இரண்டு மூன்று வித்தியாசமான ஊழியங்களை ஒன்றாக நீங்கள் கலக்கக்கூடாது. ஒரே நேரத்தில் மேய்ப்பனையும், சுவிசேஷகனையும். ஒரே நேரத்தில் நீங்கள் தீர்க்கதரிசியாகவும், மேய்ப்பனாக வும் இருக்கமுடியாது. ஏனென்றால் நீங்கள் வித்தியாசமான பணி, வித்தியாசமான ஊழியம் கொண்டுள்ளீர்கள் என்கிறார். மேலும் தீர்க்கதரிசி **Q & A** 221ல் **COD. Vol II,** 879வது பக்கம் 36வது பத்தியில் **Paster has a single ministry** என, அதாவது மேய்ப்பனுக்கு ஒரே ஒரு ஊழியம்தான் உண்டு என்கிறார். பாருங்கள் தீர்க்கதரிசியின் இந்த விளக்கத்தை போதிக்கும் என்னை **எல்லாம் தெரிந்தவர்** பொய்யன் என்றால், நீங்கள் விசுவாசிக்கும் தீர்க்கதரிசியும் பொய்யர். ஏனென்றால் அவர் கூறியதையே நானும் எழுதியுள்ளேன். நான் எழுதியது இக்காலத்துக்குரிய குழப்பம் என்றால் இக்காலத்துக்குரிய செய்தி என்று நீங்கள் விசுவாசிக்கும் செய்தியும் குழப்பம்தான். யார் சபையை திசைதிருப்புகிறார் என்பதை நீங்களே நிதானித்துக்கொள்ளுங்கள்.

34. இங்கு பவுல், தீமோத்தேயுவுக்கு என்ன எழுதுகிறான்? எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார். நான் பொய் சொல்லாமல் கிறிஸ்துவுக்குள் உண்மையைச் சொல்லுகிறேன். இதற்காக நான் பிரசங்கியாகவும் (Preacher) அப்போஸ்தலனா

கவும் (**Apostle**) புறஜாதிகளுக்கு விசுவாசத்தையும் சத்தியத்தையும் விளங்கப்பண்ணுகிற போதகனாகவும் (**Teacher**) நியமிக்கப்பட்டிருக்கிறேன் என்று எழுதுகிறான். தீர்க்கதரிசி, **Preacher** என்ற ஆங்கில வார்த்தைக்கு **தீர்க்கதரிசி** என்று பொருள் என்று கூறுகிறார் (**Q & A** 221) 1தீமோ.2:7ல் கர்த்தர் எல்லா மனுஷரும் இரட்சிக்கப் படவும், (ஏனென்றால் ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டும். 2பேது.3:9.) அவர்கள் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், புறஜாதிகளுக்கு விசுவாசத்தைக் குறித்தும், சத்தியத்தைக் குறித்தும் பிரசங்கிக்க பவுலை அந்தப் பணிகளுக்காக தீர்க்கதரிசியாகவும், அப்போஸ்தலனாகவும், போதகனா கவும் நியமித்தார்(**Ordained**). அதாவது பவுல் இங்கு சில பணிகளுக்காக நியமிக்கப்பட்டான், ஆனால் எபே.4:11-13ல் இரட்சிக்கப் பட்டவர்களிலிருந்து தெரிந்துகொள்ளப்பட்டவர்களைக் கொண்ட கிறிஸ்துவினுடைய சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைய கர்த்தர் சிலரை அப்போஸ்தலர்களாகவும், சிலரை தீர்க்கதரிசிகளாகவும், சிலரை சுவிசேஷகர்களாகவும், சிலரை மேய்ப்பர்களாகவும் போதகர்களாகவும் ஏற்படுத்தினார் (**Made**). இவர்கள் அந்தந்த பிரத்தியேகமான பணிக்காக உருவாக்கப்பட்டவர்கள்(**Make**). 1தீமோ.2:7ல் நியமிக்கப்பட்டார்கள். எபே.4:11-13ல் உருவாக்கப்பட்டு(**Make**) ஏற்படுத்தப்பட்டார்கள்(**Made**). அங்கு பல ஊழியங்களில் ஒருவர் நியமிக்கப்பட்டார் ஆனால் இங்கு ஒரு ஊழியம் ஒருவருக்கு மட்டுமே. மேலும் இங்கு சிலரை அப்போஸ்தலர்களா கவும், சிலரை தீர்க்கதரிசிகளாகவும் என கூறியிருப்பதால் அந்தந்த பிரத்தேகமான பணிக்கு சிலரை அதற்குரிய தகுதிகளை உடையவர்களாகவே உருவாக்கி(**Make**), ஏற்படுத்தினார்(**Made**) எனக் காண்கிறோம். சிலரை அப்போஸ்தலர்களாகவும், தீர்க்கதரிசிகளாகவும் நியமித்தார் எனக் கூறியிருந்தால் பல ஊழியங்களுக்கு ஒருவர் எனக் கூறலாம். ஆதலால் ஒரு பணி ஒருவருக்கே என்ற உபதேசம் சரியே. **எல்லாம் தெரிந்தவர்** தான் குருடனாக இருப்பதை அறியாமல் தீர்க்கதரிசியையும் யோசுவாவையும் குருடனாக்குகிறார். அந்தோ பரிதாபம் !.

35. சிலர் ஒருவன் சத்தியத்தை அறிந்து வைத்திருக்கும் அறிவைக்கொண்டு இவன் கர்த்தரால் பயன்படுத்தப்படும் ஒரு பெரிய பாத்திரம் ஆதலால்தான் சத்தியத்தை நன்கு அறிந்து வைத்திருக்கிறான் என நினைக்கிறார்கள். இந்த எண்ணம் ஆவிக்குரிய ரீதியில் தவறானது. ஒருவன் சத்தியத்தை அறிகிற அறிவுடையவனாக, ஆனால் அதே நேரத்தில் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் அடையாதவனாக இருக்கலாம். உதாரணமாக சீமோன், இயேசுவை நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான். அதற்கு அவர் சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை; பரலோகத்தி லிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார் என்றார். மத்.16:16,17. பாருங்கள் லேகியோன், இயேசுவே உன்னதமான தேவனுடைய குமாரனே என்று அறிக்கை செய்தான். மாற்.5:7. அடுத்து ஒரே தேவன் உண்டு, அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்ற வெளிப்பாடு எங்களுக்கு கிடைத்துவிட்டது, நாங்கள் மணவாட்டி என்கிறீர்கள். அதே நேரத்தில் தேவன் ஒருவர் உண்டென்று பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குகிறது. யாக்.2:19. நீங்கள் விசுவாசிக்க மட்டும் செய்கிறீர்கள் ஆனால் சாத்தானோ விசுவாசித்து நடுங்குகிறான். ஆதலால் சத்தியத்தை அறிந்து வைத்திருப்பது பெரிதல்ல. சாத்தான் நம்மைவிட சத்தியத்தை நன்கு அறிவான். ஆதலால் வீணான மனுஷனே கிரியை தேவை, கனியும் தேவை. தேவபக்தியை ஆதாய தொழிலாகக்கொண்டு ஊழியம் செய்கிறவர்கள் சத்தியத்தை அறிந்திருந்தும் யூதாஸ் ஆவியைப் பெற்றிருப்பதால் பொருளாசைக்காரராகி மக்களிடம் பலவித உபாய தந்திரங்களையும், கபடங்களையும் பயன்படுத்துவதால் பெருகி ஐசுவரியவான்களாகி கர்த்தர் எங்களை ஆசீர்வதித்தார் என பறைசாற்றுவதால் கர்த்தருடைய ஆசீர்வதிக்கும் வல்லமையை இழிவாக்குகிறார்கள். அந்நிய அக்கினி ஸ்தம்பத்தை தேவனுடைய பிரசன்னம், பிரசன்னம் என்று பறைசாற்றி, அடித்த கொள்ளைக்கு கணக்கே கிடையாது. இந்தக் கொள்ளை கர்த்தருடைய ஆசீர்வாதமா? அரசியல்வாதி கொள்ளையடிப்பதே இவர்களிடமிருந்துதான் கற்றுக்கொண்டானோ என்று எண்ணத்தோன்றுகிறது. இதனால் தேவனுடைய நாமம் தூஷிக்கப்பட்டதேயன்றி மகிமைப்படவே இல்லை.

36. ஐந்துவகை ஊழியத்தில் தான் ஒரு பாஸ்டர் என்கிறான். இவன் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதில்லை. இக்காலத்துக்குரிய செய்திக்கும் கீழ்படிவதில்லை. அவிசுவாசியினுடனே விசுவாசிக்கு பங்கு ஏது என வேதமும் செய்தியும் கூறுகிறது. மேலும் ஒரு விசுவாசி மற்றொரு விசுவாசியையே திருமணம் செய்ய வேண்டும், எக்காரணத்தைக் கொண்டும் ஒரு விசுவாசி ஒரு அவிசுவாசியை திருமணம் செய்யவே கூடாது என்பது இக்காலத்துக்குரிய செய்தி. இப்படியிருக்க இவன் துணிகரமாக அவிசுவாசியுடன் சம்பந்தம் கொள்ளுகிறான். அவிசுவாசியை திருமணம் செய்கிறான். விருத்தசேதனமுள்ள ஆவிக்குரிய இஸ்ரவேலன் என்று கூறிக்கொண்டு விருத்தசேதனம் இல்லாத ஸ்தாபன சபையாருடன் சம்பந்தம் கொண்டு, பெண் கொடுப்பதும் எடுப்பதும் இவர்களுக்கு நிந்தை (**Reporach**) அல்லவா. ஆதி.34:14. கபடமுள்ள வேலையாளாகிய இவன் அவிசுவாசியுடன் சம்பந்தம் கொண்டு, அந்த அவிசுவாசியை விசுவாசியாக்கிவிடுவேன் என்கிறான். ஆனால் வேதம் அவிசுவாசி யுடன் சம்பந்தம் கொள்ளாதே என்றே கூறுகிறது. ஆனால் இவனோ தனக்கு சாதகமாக தேவனுடைய வார்த்தையையும், செய்தியையும் மாற்றிக்கொள்ளுகிறான். இப்படிப்பட்ட ஊழியக்காரன், மாய்மாலக்காரன். இவனை நம்பி நீங்கள் சத்தியத்தை அறிகிற அறிவில் வளர முடியாது. மேலும் நீங்கள் மோசம்போகாதீர்கள். ஏனென்றால் இவனுக்குள் இருக்கும் ஆவி உங்களிடம் வந்து தங்கும். இதை நான் உபதேசிப்பதால் தானே அதிகமதிகமான பாஸ்டர்கள் தங்கள் சபைகளுக்குள் என்னை அனுமதிப்பதில்லை. அவர்கள் கட்டிய கூண்டிலிருந்து ஆடுகளை நான் சத்தியத்திற்குள் வழிநடத்தி வெளியே கொண்டு வந்துவிடுவேன் என்ற பயம்

தானே. இதனால் அவர்கள் பொருளாதார நிலை பாதிக்கப்படும் என்ற பயமும் உண்டு. மந்தைக்கு முன்மாதிரியாக இல்லாத மேய்ப்பன் எப்படி தேவனுடைய சபையை பக்திவிருத்தி அடையச் செய்யமுடியும்? ஒருக்காலும் முடியாது.

37. மயிரைப்பின்னி, பொன் ஆபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாய் இராமல், அழியாத அலங்காரமாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது. இதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது. 1பேது.3:3,4. ஆனால் சபைக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டிய மேய்ப்பன் தனது செல்வச்செருக்கினால் தனக்குப்பிரியமானவர்களை பொன் ஆபரணங்களினால் யேசபேலைப் போன்று அலங்கரித்து மனுஷர்கள் பார்வைக்கு இப்பிரபஞ்சத்துக்குரியவர்களாகக் காணப்படுகிறார்கள். பாருங்கள், ஒருவன் தன் சொந்தக்குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், அவன் தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்? இதுகுறித்து நான் இப்படி கள்ள கபடமுள்ள வேலையாட்களை கடிந்து கொள்வதினால் பொதுவாக நம் மத்தியில் உள்ள அநேக மேய்ப்பர்கள் மத்தியில் புறக்கணிக்கப்பட்டவனாயிருக்கிறேன். ஆனாலும் தேவனுடைய மந்தையிலுள்ள ஆடுகள் எனது கூச்சலுக்கு செவி கொடுத்து தங்களை சுதாரித்துக்கொண்டு வருகிறதைக் காண்கிறேன். அது எனக்கு மிக்க ஆறுதலாயிருக்கிறது.

38. சில ஊழியர்கள் தாங்கள் இக்காலத்துக்குரிய செய்தியில், ஐந்துவகை ஊழியத்தில் ஒருவராக இருக்கிறோம் எனக் கூறுகிறார்கள். தங்கள் பிள்ளைகளுக்கு ஒரு அவிசுவாசியை திருமணம் செய்து வைக்கிறார்கள். இவர்களது பெண்கள் தங்கள் மயிரைப்பின்னி, பொன் ஆபரணங்களை அணிந்து உயர்ந்த வஸ்திரங்களை உடுத்தி, தலையில் பூக்களைச் சூடி புறம்பான அலங்காரம் செய்கிறார்கள். ஸ்திரீ தன் தலை மயிரை நீளமாக வளர்க்கவேண்டும். அது அவளுக்கு முக்காடாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என தேவனுடைய வார்த்தைக் கூறினாலும் இவர்களது பெண்கள் தங்கள் தலையை தங்கள் சேலை முந்தானையால் மூடிக்கொள்வதே முக்காடு என்கிறார்கள். இவர்கள் இன்னும் தங்கள் பழைய சுபாவத்தை விட்டு விலகவில்லை, மனந்திரும்பவில்லை. ஸ்தாபன சபை சடங்காச்சாரங்களை விட்டு வெளியே வரவில்லை. இப்படிப்பட்ட ஊழியர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். இவர்கள் போலிகளே.

39. இவர்களைக் குறித்து இக்காலத்துக்குரிய செய்தி என்ன கூறுகிறது? **இயேசு ஜாக்கிரதையாயிருங்கள் என்றார். யூதாஸ் எப்படி இருந்தான் என்று பாருங்கள்! அவன் அவர்களுடன் கூடவே இருந்தான்.... அவன் வஞ்சிக்கிறவன், போலியானவன். இந்த காலத்துக்கென மிகைப்படுத்தப்பட்டவன். அவன் இயேசுவின் சகோதரனைப் போன்று பாசாங்கு செய்து அங்கு வருகிறான். ஆனால் அவனுடைய இருதயத்தில் அவன் எப்பொழுதுமே மாம்சப்பிரகாரமான சபையை சார்ந்திருந்தான். அவர்களிடம்தான் அவன் இயேசுவை விற்றுப் போட்டான். அவன் அதைச் செய்ய முன்குறிக்கப்பட்டவனாயிருந்தான். அவன் பாவனை செய்து கிறிஸ்தவர்களைப்போல் இன்மையாகவும் தாழ்மையாகவும் அவர்களுகளுக்கு மிக அருகாமையில் இருந்து. அது கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கும். ஆனால் அவர்களுடைய கனிகளினால் நீங்கள் அறிவீர்கள்.** (தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, அதை அடையாளம் கண்டுகொண்டு, அதன்படி நடத்தல். பக்கம் 31, பத்தி 126,129 நாள் 21-2-1960)

40. **பாருங்கள் இன்றும், நம் மத்தியில் உள்ள ஊழியர்கள் தங்களை இக்காலத்திற்குரிய செய்தியோடு அடையாளம் காட்டிக்கொண்டு, அவர்களுடைய இருதயத்தில் அவர்கள் மாம்சப்பிரகாரமான சபையின் சடங்காச்சாரங்களையும், பாரம்பரியங்களையும், கிரியைகளையும், போதனைகளையும், உபதேசங்களையும் சார்ந்திருப்பதால் அவர்களைக்குறித்து ஜாக்கிரதையாயிருங்கள், எச்சரிக்கையாயிருங்கள். அவர்கள் வஞ்சகர்கள், போலிகள். ஆதலால் அவர்களைவிட்டு விலகுங்கள் விலகுங்கள் என்று திரும்பத்திரும்ப உங்களை எச்சரிக்கின்றேன்.**

41. **வேதத்திலுள்ள எந்த ஒரு வார்த்தையை புறக்கணிக்கவோ அல்லது அதற்கு சொந்த வியாக்கியானம் செய்தாலோ, அது உங்கள் ஆவிக்குரிய கணவனாகிய தேவனைப் புறக்கணித்து அவருக்கு விரோதமாக விபசாரம் செய்வதாகும். ஒன்றை தேவனுடைய வார்த்தையின்படி, இக்காலத்துக்குரிய செய்தியின்படி சரி என்று அறிந்தபிறகு, அதற்கு விரோதமாக பிசாசின் பொய் சிந்தனையோடு தகாத உறவுகொண்டு, அறிந்த சத்தியத்தின்படி நடக்காது அதை மறுதலித்து, பின்வாங்கிப்போவது ஆவிக்குரிய விபசாரம் ஆகும். இக்காலத்துக் குரிய செய்தியை அறிந்து, அதை விசுவாசித்து கிரியைகளில் அதற்கு மாறாக நடக்கும் நம் மத்தியில் உள்ள எந்த ஊழியக்காரனானாலும், விசுவாசியானாலும் அவர்கள் ஆவிக்குரிய விபசாரக்காரர்களே.**

42. இவர்கள் கனிகளை மட்டும் கொண்டு, பரிசுத்த ஆவியைப் பெறாததினால் செய்தியை முழுவதுமாக கிரகிக்கமுடியவில்லை. வேதவாக்கியங்களை முற்றிலுமாக அறிந்துகொள்ள முடிய வில்லை. அவைகளுக்கு ஏற்றவாறு வாழ்க்கை வாழ்ந்து காட்டவும் முடியவில்லை. விசுவாசத்தை வெளிப்படுத்துவது கிரியை. விசுவாசம் பரிசுத்த ஆவி.

43. ஆனாலும் செய்தி என்ன கூறுகிறது? **If he's wrong, and true in heart, God will bring him around to the Truth of the thing after a while. (Discernment of sprit. Page 13, Para 73, Dt 8-3-1960)** அதாவது ஒருவன் தவறாக இருந்தாலும் தன் இருதயத்தில் அது சரி என்ற உறுதியுடன் இருப்பானானால், அவனை சத்தியத்துக்குள் தேவன் சீக்கிரமாய் கொண்டுவருவார் என்பதாகும். ஏனென்றால் கர்த்தர் உள்ளிந்திரியங்களையும், இருதயத்தையும் சோதித்தறிகிற நீதியுள்ள நியாயாதிபதி. அவர் அவர்களுக்கு நீதியை சரிக்கட்டுவார்.

44. ஒருவன் தான் போதிக்கப்பட்டதற்கேற்ற உண்மையான வார்த்தையை நன்றாய்ப் பற்றிக் கொண்டிருக்கிறவனாயிருக்கவேண்டும். தீத்.1:9. அதோடு மட்டுமல்ல தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாயிருக்கவேண்டும். அப்.24:16. ரெபெக்காள் ஆபரணங்களை அணிந்திருந்தாள், அவள் சபைக்கு அடையாளம். ஆதலால் நம்முடைய பெண்களும் ஆபரணங்களை அணிந்து தங்களை அலங்கரிக்கலாம் என்பது மாம்சசிந்தை. மனுஷ ஞானம் போதிக்கிற வார்த்தை. இப்படிப்பட்ட உபதேசங்களுக்கு செவிகொடாதீர்கள். ரெபெக்காள் மாம்சத்துக்குரிய சபை. 1பேது.3:3,4 ஆவிக்குரிய சபையின் அடையாளம்.

45. இந்நாட்களில் சகோ.ஜெயராஜ் (புதுக்கோட்டை)ன் 1963ல் எடுத்துக்கொள்ளப்படுதல் நடந்துவிட்டது, இனி ஐந்துவகை ஊழியங்கள் கிடையாது, கர்த்தருடைய இராப்போஜனம் தேவையில்லை, நாம் யாவரும் ஆயிரம் வருட அரசாட்சியில் இருக்கிறோம் எனக்கூறி ஒரு கூட்டம் ஜனங்களை ஆதாயப்படுத்தி தன்னை பெரியவனாகப் பாராட்டினார். இவருடைய உபதேசமும் சத்தியத்தின்படி தவறு என்று நிரூபிக்கப்பட்டது. அப்படியிருந்தும் இவர்கள் கழந்துகொள்ளுதலை விரும்பவில்லை, அதை அசட்டைப்பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு குருவி தன் பிராணனை வாங்கும் கன்னியை அறியாமல் அதில் விழத் தீவிரிக்கிறதுபோல பாஸ்டர் ஜெயராஜ் பின்னே போய்க்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் வழிகளின் பலனை கூடிய சீக்கிரத்தில் புசிப்பார்கள். அப்.5:36,37.

46. அடுத்து சபைகூடுதல் வேளைகளில் சத்தமிடுகிற உயிரில்லாத வாத்தியக்கருவிகளின் இசை தேவையா என்ற கேள்வி எழுந்தது. சபை ஆரம்பநாட்களில், அப்போஸ்தலர்கள் காலத்தில் சபைகூடும் வேளைகளில் எங்கும் இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டதாக ஆதாரங்கள் இல்லை. அவர்கள் ஆவியாகிய தேவனை ஆவியோடும் கருத்தோடும் பாடி, ஆவியோடும் உண்மையோடும் பரிசுத்த அலங்காரத்துடனே தொழுது கொண்டார்கள். ஆவிக்குரியவனை பரவசப்படுத்த பரிசுத்த ஆவியேயன்றி இசை தேவையில்லை. ஆதலால் இசைக்கருவிகளுக்கு சபைகூடுதல் வேளைகளில் முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது என உபதேசித்தேன், செய்திகள் வெளியிட்டேன். அது பற்பல இடங்களில் கிரியை செய்து வருகிறதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

47. அடுத்து கர்த்தருடைய இராப்போஜன வேளையில், கால்களைக் கழுவும் சடங்காச்சாரத்தை போஜனத்திற்கு முன் அல்லது பின், அதை எப்பொழுது ஆசரிக்கவேண்டும் என்ற பிரச்சனையும் சபையில் காணப்பட்டது. கர்த்தர் தம்முடைய சீஷர்களோடு, இறுதி இராப்போஜனத்தை ஆசரித்ததை கிரமப்படுத்தி எழுதி, கர்த்தருடைய இராப்போஜனம் நடந்து கொண்டிருக்கையில் தான் கர்த்தர் இராப்போஜனத்தை விட்டெழுந்து சீஷர்களுடைய கால்களைக்கழுவி துடைக்கத்தொடங்கினார், ஆதலால் முதலில் கர்த்தருடைய இராப்போஜனம், பின்பு கால்களைக் கழுவும் சடங்காச்சாரம் என உபதேசித்து தவறான ஆசரிப்பு சரி செய்யப்பட்டது.

48. சிலர் என்னிடம், நீங்கள் உங்கள் தேவைகள் எல்லாவற்றிற்கும் தேவனைச் சார்ந்திருப்பது இல்லை, விசுவாச வாழ்க்கை வாழ்வது இல்லை, உங்கள் தேவைகள் சில சகோதரர்களிடம் அவ்வப்போது கேட்டுப் பெற்றுக்கொள்ளுகிறீர்கள், இது ஒரு உண்மையான ஊழியக்காரனுடைய தன்மை அல்ல என்கிறார்கள். பாருங்கள், ஆதி அப்போஸ்தலர்கள் காலத்தில் பரிசுத்தவான்களுக்கு குறைவுகள் இருந்தது. ரோ.12:15. அவர்கள் தேவனை சார்ந்திருக்க வில்லையா? விசுவாச வாழ்க்கை வாழவில்லையா? அவர்களுக்காக ஏன் தர்மப்பணம் சேகரிக்கப்பட்டது? இதுகுறித்து நீங்கள் 1கொரி.16:1,2 மற்றும் 2கொரி.8,9 அதிகாரங்களில் வாசிக்கலாம். பிரியமானவர்களே தேவனுடைய ஊழியக்காரர்கள், பரிசுத்தவான்கள் இப்பிரபஞ்சத்தில் தரித்திரர்களே, குறைவுள்ளவர்களே. அவர்களுடைய குறைகளை தேவன் தம்முடைய சரீரமாகிய சபை மூலமாக நிறைவாக்குகிறார். பாருங்கள் எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களுக்கு மக்கெதோனியா, அகாயாவிலுள்ளவர்கள் உதவி செய்தார்கள். ரோ.15:25. எப்பாப்பிரோதீத்து, பவுலின் குறைச்சலில் உதவி செய்தான். பிலி.2:23. பவுலின் குறையை மக்கெதோனியாவிலிருந்து வந்த சகோதரர் நிறைவாக்கினார்கள். 2கொரி.11:9. பிலிப்பியர் பவுலின் குறைச்சலை நீக்கும்படி இரண்டொருதரம் உதவினார்கள். பிலி.4:16. நான் தேவ பக்தியை ஆதாயத்தொழிலாகக் கொள்ளாமல், விசுவாசிகளை ஏமாற்றிப் பிழைக்காமல் என் தேவைகளை என் சகோதரரிடமிருந்து கேட்டு பெற்றுக்கொள்வதில் தவறு என்ன? என் குறைச்சலில் சில சகோதரர்கள் எனக்கு உதவி செய்வதும் வேதத்தின் அடிப்படையில் சரியானதே.

49. ஒரு சில சகோதரர்கள் என்னிடம், குறிப்பாக ஒருவருடைய பெயரை எழுதாமல், ஊழியத்தின் பாதையில் அவர்களுடைய தவறுகளை, குறைகளை மறைமுகமாக சுட்டிக்காட்டி எழுதுங்கள். பெயர்களைக் குறிப்பிட்டு எழுதுவது அந்த நபரைப் பாதிக்கிறது எனக் கூறுகிறார்கள். பாருங்கள் பவுல், தீமோத்தேயுவுக்கு

எழுதும்போது இமெநேயும், பிலேத்தும் சத்தியத்தை விட்டு விலகி, உயிர்த்தெழுதல் நடந்தாயிற்று என்று சொல்லி சிலருடைய விசுவாசத்தை கவிழ்த்துப் போடுகிறார்கள் என 2தீமோ.2:17,18. வசனங்களில் எழுதுகிறான். அப்படியானால் இந்த விஷயத்தில் நான் பாஸ்டர் ஜெயராஜ் அநேகருடைய விசுவாசத்தை கவிழ்த்துப் போட்டுவிட்டார் என எழுதுவதில் என்ன தவறு? மேலும் 2தீமோ.4:10ல் தேமா, இப்பிரபஞ்சத்தின் மேல் ஆசை வைத்து தன்னைவிட்டுப் பிரிந்து போய்விட்டான் என பவுல் எழுதுகிறான். இந்நாட்களில் அநேக ஊழியர்கள் இப்பிரபஞ்சத்தின் மேல் ஆசை வைத்து செய்தியை விட்டு விலகிப் போய்விட்டார்கள் என்று அவர்கள் பெயர்களை குறிப்பிடுவதில் என்ன தவறு? மேலும் அப்.5வது அதியில் தெயுதாஸ், யூதாஸ் இருவரையும் நம்பி ஜனங்கள் மோசம்போனது குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பாஸ்டர் டேனியேல் கிறிஸ்டியான், அவரது ஊழியத்தில் கர்த்தர் அக்கினி ஸ்தம்பத்தில் தோன்றி சாட்சி கொடுக்கிறார் எனக் கூறி அவரால் உற்பத்தி செய்யப்பட்ட அந்நிய அக்கினி ஸ்தம்பத்தை ஜனங்கள் முன் நிறுத்தி, நன்கொடைகள், காணிக்கைகள் பெற்று தேவபக்தியை ஆதாயத் தொழிலாகக்கொண்டு மக்களை வஞ்சிக்கிறார் என எழுதி, ஜனங்கள் வஞ்சிக்கப்படாதபடிக்கு அவர்களை எச்சரிப்பதில் என்ன தவறு? ஆதலால் பிரியமானவர்களே மிக அத்தியாவசியம் என்று எண்ணும் இடங்களில் பெயர்களைக் குறிப்பிடுவதில் தவறு ஒன்றும் இல்லை. ஆதலால் உங்கள் சுய விருப்பு, வெறுப்பின்படி என்னை நியாயந்தீர்க்காமல், தேவனுடைய வார்த்தையின்படி நியாயந்தீர்த்தால் அது தேவ சமூகத்தில் பிரீதியாயிருக்கும்.

50. இயேசுவும் தம்முடைய ஊழியக் காலத்தில், இருதயத்தில் கள்ளத்தையும், கபடத்தையும், பொருளாசையையும் வைத்துக்கொண்டு, வெளியில் தேவனுடைய மனுஷர்கள்போல் வேடமிட்டுத் திரிந்த மதத் தலைவர்களை விரியன்பாம்புக் குட்டிகளே, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளே எனக் கண்டித்தார். அவர்களது தவறான உபதேசங்களை புளித்த மாவுக்கு ஒப்பிட்டார். பவுலும் தன் ஊழியத்தில் கண்ட போலி ஊழியர்களை கள்ளஅப்போஸ்தலர்கள், கள்ளகபடமுள்ள வேலையாட்கள், ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்தவர்கள் என்றெல்லாம் கடிந்து கண்டனம் பண்ணினான். பிரியமானவர்களே சபை பக்திவிருத்தியடைய ஏற்படுத்தப்பட்டுள்ள ஊழியர்கள் சத்தியத்தில் போதிக்கப்பட்டவர்கள். அவர்கள் சத்தியத்திற்காக வைராக்கியம் உள்ளவர்கள். அவர்கள் சபையில் காணப்படும் போலிகளைக் கண்டு சும்மா இருக்கமாட்டார்கள். அவைகளுக்கு விரோதமாக கூச்சலிட்டுக் கொண்டேயிருப்பார்கள். இதில் உண்மையும் உத்தமுமானவர்கள் யாரும் பாதிக்கப்பட மாட்டார்கள். போலிகள் பாதிக்கப்படுவதால், அவர்கள் தங்கள் கூலியாட்களைக் கொண்டு ஐயய்யயோ, ஊழியர்களை குறை கூறுகிறானே, ஊழியங்களை குறை கூறுகிறானே, இவனுக்கு இந்த அதிகாரத்தைக் கொடுத்தது யார் என அவனுக்கு விரோதமாக கூக்குரலிட வைப்பார்கள். ஆனால் அது அவனை கடுகு அளவும் பாதிக்காது. சத்தியம் அவனுக்கு போதுமான பெலனாயிருக்கும். சத்தியத்தைக் குறித்து தாகமின்றி, தங்கள் சுய சுகபோக நிலையை தக்க வைத்துக்கொள்ள, தங்களுக்கு எந்தவிதமான எதிர்ப்பின்றி, தங்களை வளப்படுத்திக் கொண்டிருக்கும் ஊழியர்கள் சத்தியமில்லாதவர்கள். அவர்கள் தேவபக்தியை ஆதாயத் தொழிலாகக் கொண்டவர்கள்.

51. சிலர் நான் ஜாதி பாகுபாடு பார்க்கிறவன் என்றப் புரளியைக் கிளப்பிவிட்டு, விசுவாசிகள் மத்தியில் என்னைக் குறித்து ஒரு அதிருப்தியை உருவாக்கி வருகின்றனர். நாம் வேதவாக்கியங்களில் இனம், குலம், ஜாதி, வம்சம், வர்க்கம், கோத்திரம், ஜனம் போன்ற பாகுபாடுகளை மனுக்குலத்துக்கடுத்தக் காரியங்களில் காண்கிறோம். நடமாடும் மிருகங்களில் பல ஜாதிகள், ஊரும் பிராணிகளில் பல ஜாதிகள், மச்சங்களில் பல ஜாதிகள், பறக்கும் பறவைகளில் பல ஜாதிகள் உண்டு எனக் காண்கிறோம். இப்பொழுது நாய், இதில் பல ஜாதிகள்; பல்லி, இதில் பல வகைககள்; ரோஜா பூ, இதில் பல கலர்களை உடைய தனித்தனி ஜாதிகள்; முருங்கை மரம், இதில் பல இன முருங்கைகள்; மாம்பழம், இதில் பல வகைகள்; பசுமாடு, இதில் பல இனங்கள்; எருமை மாடு, இதில் பல இனங்கள் இவ்வாறாக ஒவ்வொரு வகையிலும் பல இனங்கள், பல ஜாதிகள் உண்டு என்பதை நாம் நன்கு அறிவோம்.

52. மனுக்குலமும் இயற்கையோடு சம்பந்தப்பட்டதேயன்றி, வித்தியாசமானது அல்ல. ஆதலால் மனுக்குலத்திலும் பல இனம், குலம், ஜாதி, வம்சம், கோத்திரங்கள் உண்டு. அது அது அதனதன் இனத்தை, ஜாதியை, வம்சத்தை, கோத்திரங்களை பிறப்பிக்கவேண்டும். இதில் ஒரு இனத்தை மற்றொரு இனத்துடன் கலக்கவேண்டாம். உதாரணமாக ஒருவர் பிராமண குலத்தில் சேர்ந்திருந்தால், அதிலே பெண் கொண்டு, பெண் கொடுத்து இருக்கட்டும். இந்த இனத்தை பறையர் குலம் என்ற மற்றொரு குலத்துடன் கலக்கவேண்டாம். ஆனால் பிராமணர் குலம் உயர்ந்தது, பறையர் குலம் தாழ்ந்தது என்ற உயர்வு தாழ்வு பாகுபாடு இருக்கக்கூடாது, சமநிலை அந்தஸ்து அனைத்து குலக்கோத்திரங்களுக்கும் உண்டு என்றே எழுதி, பிரசங்கித்து வருகிறேன்.

53. ஆனால் ஆவிக்குரிய கிறிஸ்தவர்கள் மத்தியில் பிராமணர், பறையர் என்ற இனப் பாகுபாடே கிடையாது. இங்கு கிரேக்கர், யூதர், இந்தியர் என்ற பாகுபாடும் கிடையாது. இங்கு சபையில் கணவன், மனைவி என்ற பாகுபாடும் கிடையாது. இங்கு ஆண் பெண் என்ற பாகுபாடும் கிடையாது. ஏனென்றால் இவர்களுடைய குடியிருப்பு பரலோகம், அங்கு இவர்கள் தேவதூதர்களைப் போல் இருப்பார்கள்.

54. திருமணம் என்பது இப்பிரபஞ்சத்துக்குரியது. இங்குதான் பெண் கொள்வதும் கொடுப்பதும் உண்டு. இங்குதான் யூதர் கிரேக்கர் என்ற பாகுபாடும் உண்டு. இங்குதான் பிராமணர் பறையர் என்ற பாகுபாடும்

உண்டு. ஆதலால் இப்பிரபஞ்ச இல்லற வாழ்க்கையில் கலப்புத் திருமணம் செய்யாதீர்கள் என்று எழுதினேன். அவரவர் அவரவர் குல கோத்திரங்களில் பெண் கொண்டும் கொடுத்தும் இருப்பது நலம். ஆனால் ஒரு கிறிஸ்தவ விசுவாசி, தன்னுடன் விசுவாசத்திலுள்ள ஒரு பெண்ணையே திருமணம் செய்யவேண்டும், எக்காரணத்தைக் கொண்டும் ஒரு அவிசுவாசியை திருமணம் செய்யக்கூடாது என்று எழுதினேன். இதில் என்ன தவறு? ஆனாலும் ஒரு பிராமணர் ஒரு பறையரைத் திருமணம் செய்வதாக இருந்தால் அதில் எனக்கு ஆட்சேபனை கிடையாது. இது அவரவர்கள் விருப்பத்திற்குரியது எனவும் எழுதினேன்..

55. இங்கு இரு சம்பவங்களை குறிப்பிட விரும்புகிறேன். கடந்த வருடம் என்னை ஒரு பெண் வீட்டார் அணுகி, தங்கள் மகளுக்கு சத்தியத்திலுள்ள ஒரு பையன் கிடைத்தால் பார்க்கும்படி கூறினார்கள். அவர்கள் தங்கள் இனம், குலம், ஜாதி பற்றி எதுவும் என்னிடம் கூறவில்லை. நான் அவர்கள் ஜாதி அல்லாத மற்றொரு ஜாதி பையனைப் பார்க்க, அவர்கள் பையன் வேறு ஜாதி என அறிந்து, வேண்டாம் என்றார்கள். கலப்புத் திருமணம் சரி என்றால் இந்தப் பெண்ணுக்கு கலப்புத் திருமணமே நடக்கவேண்டும், அது தவறு என்றால் அவள் ஜாதியிலே பையன் கிடைக்கவேண்டும் என கிறிஸ்துவுக்குள் தீர்மானித்தேன். அரை ஆண்டு காலமாக பல இடங்களில் முயற்சி செய்தும் அவர்கள் ஜாதியில் பையன் கிடைக்கவில்லை. இந்நிலையில் வழியின்றி, வேறு ஜாதி பையனை பார்க்க பல இடங்கள் அலைந்தும் கிடைக்கவில்லை. ஏனென்றால் முதலில் பார்த்தப் பையனை வேண்டாம் என்று கூறிவிட்டதினால் இந்தப் பயிற்சி எங்களுக்கு ஏற்பட்டது. நான் மனச் சோர்வு அடைந்துவிட்டேன். முடிவில் ஒரு ஆண்டு காலத்திற்கு பின்பு அந்தப் பெண்ணுக்கு அவள் ஜாதியிலே சத்தியத்தில் உள்ள ஒரு விசுவாசி கிடைத்தான் எனக் கூறினார்கள். அவர்களுடைய விசுவாசம் அவர்களுக்கு வழியை திறந்து கொடுத்தது. இதில் நான் என் உபதேசத்தை உறுதிப்படுத்திக் கொண்டேன்.

56. அடுத்து ஏப்ரல் மாதம் சென்னையில் நான் இருந்த நாட்களில் ஒருவர் தன் மகளுக்கு சத்தியத்தில், தன் ஜாதியில் பையன் பார்த்தும் சரியான சம்பந்தம் கிடைக்கவில்லை. ஆதலால் சோர்வுற்று மறு ஜாதியில் பையன் தேட ஆரம்பித்ததாகக் கூறினார். ஆனால் சில மாதங்கள் கழித்து, தேவன் எதிர்பாராத விதமாக அவரது ஜாதியிலே ஒரு விசுவாசியைக் கொடுத்து, அவர் மறு ஜாதியில் மணமகன் கொள்ளாதபடி வழிநடத்தினார் என சாட்சிக் கூறினார். இது என் உபதேசத்தை மேலும் எனக்குள் உறுதிப்படுத்தியது.

57. நான் இந்த உபதேசத்தை யாதொருவர் மீதும் திணிக்க விரும்புவது இல்லை. இந்த உபதேசத்தை ஏற்றுக்கொள்வது, ஏற்றுக்கொள்ளாதது அவரவர்கள் விருப்பம், ஆவியின் வழிநடத்துதல். நான் இந்த உபதேசத்தை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள், ஏற்றுக் கொள்ளாதவர்கள் இருவரையும் ஒரே சீராகவே நேசிக்கிறேன். தீர்க்கதரிசியும் கலப்புத் திருமணத்தை அங்கீகரிக்கவில்லை.

58. அடுத்து திருமணத்தில் தாலி அல்லது மோதிரம் அணிவது குறித்தும் ஒரு பிரச்சினை நம் மத்தியில் உள்ளது. இது குறித்து தகுந்த விளக்கம் எனது **கிறிஸ்தவ விவாகம் மற்றும் விவாகரத்து** என்ற செய்தியில் எழுதியுள்ளேன். பாருங்கள், ஞானஸ்நானம் தேவனைப் பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கை. கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலில் இது நம்மை இரட்சிக்கிறது. 1பேது.3:20. ஞானஸ்நானம் நல்மனச சாட்சிக்கு ஒரு வெளிப்படையான அடையாளம். அவ்வாறாகவே கால்களைக் கழுவும் சடங்காச்சாரத்தில், நம்மில் ஒருவரில் ஒருவருக்கு பங்கு உண்டு என்பதற்காக ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவுகிறோம். இதுவும் ஒரு வெளிப்புறமான அடையாள ஆசரிப்பு. அவ்வாறாகவே திருமணத்தில் ஒரு ஆண் பெண் தங்களுக்குள் செய்து கொள்ளும் உடன்படிக்கைக்கு வாக்குறுதிகளுக்கு அடையாளமாக தாலி அல்லது மோதிரம் அணிவிக்கிறார்கள். ஆக தாலி அல்லது மோதிரம் ஒரு நல்மனச்சாட்சியின் உடன்படிக்கைக்கு அடையாளமாக அணிவிக்கப்படுகிறது. இது, அவளை ஒரு பாவி இச்சிப்பதிலிருந்து இரட்சிக்கிறது. ஞானஸ்நானம் மணவாட்டியை உயிர்த்தெழுதலில் இரட்சிக்கிறது. திருமண தாலி அல்லது மோதிரம் ஒரு பாவியினுடைய இச்சையிலிருந்து திருமணமான ஒரு பெண்ணை இரட்சிக்கிறது. அவள் தன்னுடைய உடன்படிக்கையை வேதவதக்கியங்களின்படி நடந்து காத்துக் கொள்வாளானால் அந்த வெளிப்புற அடையாளம் நிச்சயமாக அவளை ஒரு பாவியினுடைய கண்களின், மாம்சத்தின் இச்சைகளிலிருந்து இரட்சிக்கும். அவ்வண்ணமாகவே கால்களைக் கழுவுதலும் ஆணவத்திலிருந்து, மேட்டிமையிலிருந்து கிறிஸ்துவின் மணவாட்டியை இரட்சிக்கிறது. தாழ்மையை கற்றுக்கொடுக்கிறது. ஒருவரி லொருவருக்கு பங்கு உண்டு என்பதை உணர்த்தி, உறுதிப்படுத்துகிறது.

59. ஆக உடன்படிக்கை என்றால் அதற்கு வெளிப்புற அடையாளம் ஒன்று உண்டு. உதாரணமாக தேவனுக்கும் நோவாவுக்கும் இடையே **வானவில்.** ஆதி.9:13. தேவனுக்கும் ஆபிராமுக்கும் இடையே **விருத்தசேதனம்.** ஆதி.17:11. **இரத்தம்** அடையாளமாயிருந்து இஸ்ரவேல் ஜனங்களை சங்காரத்திலிருந்து இரட்சித்தது. யாத்.12:13. **சிகப்பு நூல் கயிறு** அடையாளமாயிருந்து ராகாப் வேசியையும், அவள் குடும்பத்தாரையும் சங்காரத்திலிருந்து இரட்சித்தது. யோசு.2:17. அதுபோல ஒரு பெண்ணினுடைய திருமண தாலி அல்லது மோதிரம் நிச்சயமாக அவளை ஒரு பாவியினுடைய இச்சையிலிருந்து இரட்சிக்கும்.

60. ஆனால் ஏவாள் தாலி அணியவில்லை, சாராள் தாலி அணியவில்லை என்பது வீண்தண்ட வாக்குவாதம். பொதுவாக சபையில் விசுவாசி, அவிசுவாசி, பாவனை விசுவாசி இருப்பதால், அவர்கள் தங்கள் தங்கள் கலரை யூதாஸ் காண்பித்தது போல வேளை வரும் பொழுது காண்பிப்பார்கள். இக்காலத்திற்குரிய

செய்தியில் இருக்கிறேன் எனக் கூறி, தனக்குச் சாதகமானதைப் பற்றிக்கொண்டு, மற்றவைகளை நிராகரிப்பவன் ஒரு அவிசுவாசியே. நீ இக்காலத்திற்குரிய செய்தியிலிருந்தால் திருமண வெளிப்புற அடையாளமாகிய தாலி அல்லது மோதிரத்தை அணிந்துகொள். நாங்கள் அணியமாட்டோம் என நீ கூறுவாயாகில் அது உன் சுய நீதி. ஞானஸ்நானம் வேளையில் திருமணத் தாலியை அல்லது மோதிரத்தை அணியக்கூடாது, திருமணத்தில் தாலி மோதிரம் அணியக்கூடாது என்பதெல்லாம் இருதயத்தில் அல்ல வெளி வேஷத்தில் மேன்மை பாராட்டுகிற சுய நீதியைக் கொண்ட பரிசுத்தம். ஜீவனுள்ள தேவனுடைய சபையோ எதையும் சுய நீதியாக உற்பத்தி செய்யாது. சுய நீதியை நிலைநிறுத்துகிறவர்கள் தேவ நீதிக்குக் கீழ்படியவில்லை. ரோ.10:3. நல்லதென்று நிச்சயித்த காரியத்தில் தன்னைக் குற்றவாளியாக்காதவன் பாக்கியவான்.

61. மும்பை வாழ் S.சாமுவேல் என்பவர் இந்நாட்களில் ஒரு நூதனமான உபதேசத்தைக் கொண்டுவந்து, அது கடைசிக்கால செய்தி என்றும், அவர் மட்டும் பிதாவின் பெயரைக் கண்டுகொண்டதாகவும் கூறிவந்தார். நம்முடைய சரீரத்தோடு தேவத்துவத்தை ஒப்பிட்டு, நமது சரீரம் பிதா என்றும், நம்முடைய இரு கைகளும் தேவனுடைய இரு குமாரர்கள் என்றும் கூறி, எபி.1:2, 1கொரி.8:6, யோ.17:13, ரோ.9:5 வசனங்களின் அர்த்தம் உலகத்திலுள்ளவர்கள் யாருக்கும் தெரியாது, அதை தனக்கு மட்டுமே தேவன் வெளிப்படுத்தி இருக்கிறார் எனக்கூறி, மக்கள் மனதில் ஒரு குழப்பத்தைக் கொண்டுவந்தார். ஆதலால் ஊழியர்களில் சிலர் எனது இல்லத்தில் கூடி இவரது உபதேசத்தைக் குறித்து நிதானித்து அவருடைய உபதேசம் தவறு என எடுத்துக் கூறினார்கள். மேலும் வேதப்புரட்டகனாகிய அவருக்கு அநேக புத்திமதிகள் கூறி, இப்படிப்பட்ட உபதேசத்தை மீண்டும் கொண்டு வராதபடிக்கு எச்சரித்து அனுப்பினார்கள்.

62. இவ்வாறாக குறைகள், தவறுகள் எங்கெங்கு காணப்படுகிறதோ, அவைகளைக் கண்டித்து மந்தையை செம்மையான பாதையிலே வழிநடத்தி குறைவாய் இருக்கிறவைகளை ஒழுங்குபடுத்தி சபையை பக்திவிருத்தி அடையச்செய்து வருகிறேன். இதனால் பயன்பெற்று வருபவர்கள் அநேகர். பாருங்கள், ஒருவனும் நம்மை குற்றப்படுத்தாத படிக்கு நாம் எச்சரிக்கையாயிருந்து 2கொரி.8:20, நம்முடைய கர்த்தருக்கு முன்பாக மாத்திரமல்ல, மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானதைச் செய்து 2கொரி.8:21, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே குற்றஞ்சாட்டப்படாதவர்களாயிருக்கும்படி காணப்பட 1கொரி.1:8, யாதொரு வரத்திலும் குறைவற்றவர்களாய், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படுவதற்கு காத்திருப்போம். 1கொரி.1:7. இப்பொழுது நீங்கள் **நான் குற்றம் கண்டுபிடிப்போனா? அல்லது சபையை பக்திவிருத்தி அடையச் செய்வோனா** என்பதை நீங்களே நிதானித்து முடிவு எடுத்துக்கொள்ளுங்கள்.

63. இக்காலத்துக்குரிய செய்தியிலிருக்கிறோம், இது மணவாட்டி சபை, இது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சபை என அழைக்கப்பட்டு, அங்கு காணப்படும் குறைகளையும், தவறுகளையும் பார்த்துக்கொண்டு அது முதுகில் தட்டிக்கொடுக்க என்னால் முடியாது. நான் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தி அடைய ஊழியக்காரனாக ஏற்படுத்தப் பட்டுள்ளபடியால் குறைகளையும், தவறுகளையும் என்னால் சகிக்கமுடியாது. ஆனால் சிலரால் அதை சகிக்க முடியும். அது வேறுவிதமான அன்பு.

64. இப்பொழுது நீங்கள் இணங்காத ஒன்றை நான் இங்கு எழுதியிருந்தால் அது என் அறியாமை யின் காரணமென்றும், எனக்கு அதிகம் தெரியாது என்றும் நினைத்துக்கொண்டு எனக்காக நீங்கள் ஜெபியுங்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உங்கள் ஆவியுடனே கூட இருப்பாராக. கிருபை உங்களோடிருப்பதாக. ஆமென்.

ஜுன் , 2001

கிறிஸ்துவின் அன்பில்,
**சகோ.காலேப் யோசுவா.**